

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.08.2024) சென்னை, செனாய்நகர், மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி உறுதி மொழி ஏற்று விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் மரு.ஜெயச்சந்திர பானு ரெட்டி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் மரு.சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள், பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக 24-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகளில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுமாறு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



2025 ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஆகஸ்ட் 20-ம் தேதி முதல் அக்டோபர் 18-ம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர்பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை மறு சீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29-ம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் 28-ம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. (வாக்குச்சாவடி வாரியாக சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்) 2025-ம் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

ஆகவே அக்டோபர் 29-ம் தேதி முதல் நவம்பர் 28-ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களிலும் சேர்க்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன்கூடிய 10 அல்லது 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை கொடுக்கலாம். 25 வயதிற்கு கீழ் உள்ள வீண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதற்கான இணையதள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி, உள்ளிட்ட ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் (BLA-2) இணைந்து மேற்கொண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் தீவிரமாக ஈடுபட்டு நிறைவேற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முப்பூண்டி பேரூராட்சி, வசந்த பஜார் வீதியில், ரூபாய் 98.78 லட்சம் மதிப்பீட்டில் அரசு பொது நூலகத்துறை சார்பில் புதிய முழு நேர நூலக கட்டிடத்தை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மு.மணிபாலன், இரா. அறிவழகன், சகிலாஅறிவழகன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், மு.பாஸ்கர், எம்.ராமஜெயம், ஜி.ரவிக்குமார், கே.வி.லோகேஷ், டி.கே.மாரிமுத்து, கே.என்.பாஸகர், அப்துல் கரீம், டி.மஸ்தான், எஸ்.உதயகுமார், எஸ். எம்.திருநாவுக்கரசு, எம்.அருள், பி.சுரேஷ், எம்.மெய்யழகன், எம்.முனிவேல், பா.முத்துசாமி, பா.பரத்குமார், எம்.கே.யேசுரத்தினம், கும்முடிப்பூண்டி பேரூர் ; நிர்வாகிகள் டி.கே.ராஜா, எம்.குப்பன், எஸ்.உமாபதி, அர்ஜீனன், இஸ்மாயில், எம்.அலாவுதீன், எ.நந்தகோபால், எஸ்.கருணாகரன், வ.சாண்டில்யன், தமிழ்சாதிக், கேபிள் பிரகாஷ், ரெட்டம்பேடுசெந்தில், எம்.ஜெயசந்திரன், என்.காளி, கா.சரவணன், டாக்டர் மா.தீபன், லால், திருஞானம், உதயன், அயூப்கான், எச்.எம்.டி.முரளி, எச்.எம்.டி.மனோகரன், ஆனந்தன், தசரதன், பாலாஜி, அராப்பு டி.ஜி.பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சதுரங்க பேட்டை பகுதியில் நேற்று (23.08.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் தொல்குடியினர் வேளாண்மை, மேலாண்மை திட்டத்தின் கீழ் 290 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரசு செயலாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருமதி.ஜி.லட்சுமி பிரியா திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் அரசு கூடுதல் செயலாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருமதி ஆர்.உமா மகேஸ்வரி இயக்குநர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை எஸ்.அண்ணாதுரை மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில்

# 290 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் வழங்கினார்! வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக.24-

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சதுரங்க பேட்டை பகுதியில் நேற்று (23.08.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், தொல்குடியினர் வேளாண்மை, மேலாண்மை திட்டத்தின் கீழ் 290 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் ஜி. லட்சுமி பிரியா தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி ஆர். உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. இராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

முன்னதாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் பார்வையிட்டார். தொடர்ந்து பூண்டி ஏரியில் பயனாளிகளுக்கு படகு வழங்கி சேவையினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார்

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ். அண்ணாதுரை, ம.தொ.ப., திட்ட மேலாளர் பொன்வைத்தியநாதன், திருள்ளூர் மாவட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின அலுவலர், திருமதி செல்வராணி, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக திட்ட முதன்மை ஆய்வாளர், டாக்டர் ரூபா நந்தினி, அரசு சார்பற்ற தொண்டு நிறுவன (IRCDS) பிரதிநிதி ஸ்டீபன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (NBFGR, கொச்சி), முனைவர் டி.டி.அஜித்குமார் ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

## இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது!

# பழனியில் - அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு!

## பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள்!

பழனி, ஆக.24-

பழனியில் அனைத்து உலக முத்தமிழ் முருகன் மாநாடு இன்று கொடியேற்றத்துடன் துவங்க உள்ளது. அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டை சிறப்புடன் நடத்துவதற்கு அரசு உயர் அலுவலர்கள், ஆதினகர்த்தர்கள், சமய சான்றோர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக சிறப்பு அரசாணை வெளியிடப்பட்டு 11 செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநாட்டிற்காக தனியாக வலைதளம் உருவாக்கப்பட்டு கட்டுரையாளர்கள் பங்கேற்பாளர்கள் பதிவு செய்ய வசதி செய்யப்பட்டிருந்த நிலையில் வெளிநாடு மற்றும் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இதில் பதிவு செய்துள்ளனர்.

மாநாடு நடைபெறும் கல்லூரி வளாகத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, மின் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொள்ளும் அமைச்சர்கள், மடாதிபதிகள், ஆதீனங்கள், அயல்நாட்டு விருந்தினர்கள், சமயச் சான்றோர்கள் உள்ளிட்டோருக்கு தங்குவதற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளும் விழாக் குழு சார்பில் செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டிற்கு வருகை தரும் முக்கிய நபர்கள் மற்றும் பக்தர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்காக நாலு ஏக்கரில் வாகன நிறுத்துமிடம் வசதி செய்யப்பட்டுள்ளது. மாநாட்டிற்கு வருகை தரும் அனைத்து பக்தர்களுக்கும் மூன்று வேளையும் உணவு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன.

மாநாட்டு அரங்கில் 200 பேர் அமர்ந்து காணக்கூடிய 3d திரையரங்கம் மற்றும் 2,000 பேர் அமர்ந்து காணக் கூடிய கருத்தரங்கு ஆன்மீக சொற்பொழிவு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

கோயமுத்தூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாநாட்டிற்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. தென் மண்டல ஐ.ஜி. பிரேம் ஆனந்த் சிங்கா தலைமையில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மு.இளங்கோ அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **அப்துல் ரஹ்மான்** (6/150, பனையங்கால், கும்பிடுமதுரை அஞ்சல், கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்
தி.மு.க. அமைப்புசாரா
ஓட்டுநர் அணி

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைஅமைப்பாளராக நியமிக்கப்பட்ட சந்திரசேகர், மாவட்ட இலக்கிய அணி துணைஅமைப்பாளராகவும் பொறுப்பு வகிப்பதால், அவரை மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **டி.தயாளன்**, (125, சோழா ரியல் எஸ்டேட், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை மாவட்டம்) அவர்கள் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப்
பகுத்தறிவு பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



**தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்**

**இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
### ஆகஸ்ட் 24 (2016)



**இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணிப் புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான 'முரசொலி'யில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.**

**திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**